செய்தி வெளியீடு எண்:1099 நாள்:13.11.2021

## செய்தி வெளியீடு

### பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 133ஆவது பிறந்த நாள் விழா

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 133ஆவது பிறந்த நாளை முன்னிட்டுச் சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு நாளை (14.11.2021) காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஆகியோர் மரியாதை செலுத்த உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்க உள்ளார்கள்.

ஆசிய ஜோதி என்றும், மனிதருள் மாணிக்கம் என்றும், அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இந்தியாவின் முதல் பிரதமரும், குழந்தைகளின்பால் அளவற்ற அன்பும் கொண்டிருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் 1889ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் நாள் பிறந்தார். தன்னுடைய பள்ளி படிப்புத் தொடங்கி பாரிஸ்டர் பட்டம் வரை இங்கிலாந்து நாட்டில் புகழ்மிக்க பல்கலைக்கழகங்களில் படித்தாலும், அவர் படிக்கின்ற காலத்திலேயே உலக அரசியலில் அதிக கவனமும், குறிப்பாக, அடிமைப்பட்டிருந்த நாடுகளின்பால் அதிக அக்கறையும் கொண்டிருந்தார்.

"நவீன இந்தியாவின் சிற்பி" என்று நாட்டு மக்களால் பெரிதும் விரும்பி போற்றப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தீவிர அரசியல் வாழ்க்கைக்கு 1919ஆம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவம் அடிகோலியது என்றால் அது மிகையில்லை. அண்ணல் காந்தியடிகளின் மிகுந்த நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராக உருவெடுத்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அன்னிய அடிமைத் தனத்தை எதிர்க்கின்ற வகையில், அடுத்தடுத்து அறிவிக்கப்பட்ட பல்வேறு தொடர் போராட்டங்களில் பங்கேற்று, ஏறத்தாழ 9 ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தார். சிறையில் இருந்த நாட்களில் அவர் எழுதிய நூல்களில் "உலக வரலாற்றின் துளிகள்", "இந்தியாவின் தரிசனம்" மற்றும் "விடுதலையை நோக்கி" ஆகிய நூல்களும், சுதந்திர தாகம் குறித்துத் தன் மகள் இந்திராகாந்தி அவர்களுக்கு எழுதிய 137 கடிதங்களின் தொகுப்பான 'சுயசரிதை' இன்றளவும் உலகளவில் பேசப்படும் சிறந்த நூல்களாகும்.

இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமராக ஏறத்தாழ 16 ஆண்டு கால தொடர் ஆட்சியில், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட, ஐந்தாண்டுத் திட்டங்கள், கலப்புப் பொருளாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கையில் பஞ்சசீலக் கொள்கை, அணிசேராக் கொள்கை, போன்ற வெளியுறவுக் கொள்கைகள், அறிவியல், அணுசக்தி, விண்வெளி மற்றும் வேளாண் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான அடித்தளம், நெருக்கடிக் காலத்தில் மாநிலங்களின் ஒற்றுமை மற்றும் நலன் கருதி, கொண்டு வரப்பட்ட மாநில மறுசீரமைப்பு,அலுவல் மொழி ஆணையம் ஆகியவை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வுகளாகும். மேலும், மொழி வாரியான பல்வேறு மாநிலங்களைக் கொண்டிருந்த நம் இந்திய தேசத்தின் ஜனநாயக மாண்பினைக் கட்டமைப்பதிலும், அதனை நிலை நாட்டுவதிலும் உறுதி பூண்டிருந்தார்.

இளைஞர் சமுதாயம் கற்றறிவதன் மூலமே நாட்டின் வளர்ச்சியினை மேம்படுத்திட இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, கல்விக்கான அரியபல திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்திய பெருமைக்கு உரியவர். அன்னாருடைய தியாகத்தையும், திறமையான நிருவாகத்தையும் பறைச்சாற்றுகின்ற வகையில், இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்கள்,

விளையாட்டு அரங்கங்கள், சாலைகள் உள்ளிட்ட பலவற்றிற்கு அவர் பெயர் சூட்டப்பட்டுப் பெருமை படுத்தப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை 'அறிவாற்றலுடன் நல்ல இதயத்தைக் கொண்டிருந்த அப்பெருமகன் குழந்தையின் மழலை கேட்டதும் தானும் குழந்தையாகி விடும் இயல்பினையும், ஏழைகள் வதைபடுவதைக் காணும்போது, அவர்கள் நிலையெண்ணிக் கண்ணீர் சிந்திடும் கனிந்த இரக்கத்தினையும்; நல் இதயத்தினையும் பெற்றவர் என்று பெருமிதம் பொங்கிட குறிப்பிட்டு உள்ளார்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் நேரு கண்ட ஜனநாயகம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில்,

" நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே
நேரு வானார். இந்திய
நீள் எல்லைக்கோடுதனைப் பெரும் பகைவர்
கடந்த போது என்ன
நேருமோ என்றேங்கிய இந்திய மக்கள்
நெஞ்சின் துயர்துடைத்து ஏதுவும்
நேராது நான் இருக்குமட்டும் எனச்சொல்லி
நேருவானார் "
எனக்கவிபாடி பெருமை போற்றினார்.

தன் வாழ்நாளின் இறுதிக் காலம் வரையில் குழந்தைகள், இளைஞர் நலன், அவர்களின் கல்வி வளர்ச்சி ஆகியவற்றிலேயே அதிகம் நாட்டம் கொண்டவராக இருந்த காரணத்தினால் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14-ம் நாள் குழந்தைகள் தினமாக இன்றும் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**